

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.02.2026) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேப்பர் மில்ஸ் சாலை, ரெட்டேரி சந்திப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.61 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட கொளத்தூர் பேருந்து நிறுத்தத்தை பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், ரெட்டேரி சந்திப்பில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணியர் நிழற்குடையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட குழுத் தலைவர் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான குழுவினர் நேற்று (23.02.2026) அண்ணா அறிவாலயத்தில் ம.தி.மு.க. நிர்வாகிகளுடன் தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.




2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட குழுத் தலைவர் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான குழுவினர் நேற்று (23.02.2026) அண்ணா அறிவாலயத்தில் த.மு.மு.க. தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தலைமையில் பொதுச் செயலாளர்கள் ப.அப்துல் சமது, ஜெ.ஹாஜாகனி, பொருளாளர் கோவை. ஈ.உமர் ஆகியோருடன் தொகுதி உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

## 5 சட்டமன்றத் தொகுதிகளில் - (21.02.2026)

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை!

## கழக வெற்றிக்கு - மக்கள் திரள் ஆதரவு!









தமிழ்நாட்டுப் பெண்கள் மனதில் அசைக்கமுடியாத நம்பிக்கையையும், ஆதரவையும் பெற்றுள்ளார் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் விதமாகவும், ஒன்றிய பா.ஜ.க.வும், அதன் அடிமைக் கூட்டணியும் தமிழ்நாட்டுக்கு செய்து வரும் துரோகத்தை மக்கள் முன் எடுத்துரைக்கும் விதமாகவும் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுக்க தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரைக்கூட்டமானது நடைபெற்று வருகிறது.

21.02.2026 அன்று தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டமானது 5 சட்டமன்றத் தொகுதிகளில் எழுச்சியோடு நடைபெற்றது.

வில்லிவாக்கத்தில் திருமதி.கனிமொழி சோமு, சைதாப்பேட்டையில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், போளூரில் கடலூர் புகழேந்தி, திருவெறும்பூரில் திண்டுக்கல் ஐ.லியோனி, பாபநாசத்தில் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

திருச்சி சிவா அவர்கள் பேசும்போது.. “ஒரே மொழி, ஒரே மதம்” என இந்தி மற்றும் குறிப்பிட்ட சித்தாந்தங்களைத் திணிக்க முயலும் சக்திகளிடமிருந்து, சிறுபான்மையினரின் உரிமைகளையும் நமது தாய்மொழியாம் தமிழையும் தி.மு.க. பாதுகாத்து வருகிறது பணி…என்றும், கடந்த ஆட்சிக்காலங்களில் கோரிக்கை வைத்தும் கிடைக்காத திட்டங்கள் பல உண்டு. ஆனால் இன்று, முதல்வர் அவர்கள் மக்கள் கேட்காமலேயே, அவர்களின் தேவைகளை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். மக்களுக்கான அரசாகவும், மக்கள் விரும்பும் அரசாகவும் திராவிட மாடல் அரசு உள்ளது என மக்கள் முன் எடுத்துரைத்தார்.

தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் “கல்வியில் இந்தியாவிலேயே சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதை சுட்டி காட்டியவர், தமிழ்நாடு மருத்துவத் துறையில் கொண்டு வந்த பல்வேறு திட்டங்களைப் பற்றி எடுத்து உரைத்தார். அதோடு திருவள்ளுவர், பாரதியார் ஆகியோர்களை தேர்தல் நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட்டில் ஒரு ரூபாய் கூட நமக்கு ஒதுக்காமல் ஓரங்கட்டியதோடு, நூறு நாள் வேலை திட்டத்தையும் முடக்கி தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது என பா.ஜ.க., அ.தி.மு.க.வின் இரட்டை வேடத்தை வெளிச்சம் போட்டு காட்டினார்.

திண்டுக்கல் லியோனி அவர்கள் அவருக்கே உரித்தான நகைச்சுவை பாணியில் .. “பழனிச்சாமியை TTV “அமைதிப்படை அமாவாசை” என்றார் . TTV யை “420” என்றார் பழனிசாமி. ஆகவே இது தேசிய ஜனநாயக கூட்டணி இல்லை இது தேசிய துரோகிகளின் கூட்டணி. “ என பேசியது மக்களை பெரிதும் கவர்ந்தது. அதோடு நமது பிரதமர் பிஹார் சென்று தமிழர்களை திருடர்கள் என்று சொல்வார், தமிழ்நாட்டிற்கு வந்து திருக்குறள் கூறுவார். இந்த ஏமாற்று வித்தையை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் என்றும் நம்ப மாட்டார்கள் “ என பேசி முடித்தார்.

தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை மக்களிடையே மாபெரும் வரவேற்பை பெற்று வருகிறது. முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய பா.ஜ.க., அ.தி.மு.க. சதியை முறியடித்து மக்களுக்கு கொடுத்த ரூ.5000 மற்றும் உரிமைத் தொகை 2000 ஆக உயர்த்தப்படும் என்ற உறுதி மொழி ஆகியவை மக்கள் மனதில் குறிப்பாக தமிழ்நாட்டு பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று உள்ளது.